**செய்தி வெளியீடு எண்.908** **நாள்.24.10.2008**

## கலை பண்பாட்டுத்துறை

## தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம் மாவட்டந்தோறும் கலைப்போட்டிகள் நடத்துதல், சென்னை மாவட்டக் கடைலப் போட்டிகள் நடத்துதல் பற்றிய செய்தி குறிப்பு

## செய்திக் குறிப்பு

தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம் மூலம் மாணவ மாணவியரிடையே பொதிந்து கிடக்கும் கலைத்திறமைகளை ஊக்கப் படுத்திட ஆண்டுதோறும் பல திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. நடனம், குரலிசை, ஓவியம் ஆகிய கலைகளில் திறமையுடையவர்களைத் மாநில அளவில் தெரிவு செய்து **ரூ.10,000/–, ரூ,7,500/–, ரூ.5,000/–** என முதல் மூன்று இடங்களை வென்றவர்களுக்கு அரசு ஊக்கப்பரிசு வழங்குகிறது. இதற்கான முதற்கட்ட போட்டிகள் மாவட்டந்தோறும் அக்டோபர் மாத இறுதியிலும், நவம்பர் மாதம் முதலிரு வாரங்களிலும் நடைபெற உள்ளது. **5–8, 9–12, 13–16** என மூன்று வயது வகையில் இப்போட்டிகள் இருக்கும். மாவட்ட அளவில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட அளவிலான பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பெறும். **9–12, 13–16** வயது வகையில் மாவட்டப் போட்டிகளில் முதலாவது பரிசு வென்ற மாணவ மாணவியருக்கு மாநில அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களக்கு மாநில அளவிலான பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கி அரசு மாணவ மாணவியரின் கலை ஆர்வத்தை ஊக்குவிக்கிறது. கலை பண்பாட்டுத்துறை மண்டல உதவி இயக்குநர்கள் மாவட்டந்தோறும் கலைப்போட்டிகளை நடத்த உள்ளனர்.

**சென்னை மாவட்டக் கலைப் போட்டிகள் அக்டோபர் 31, நவம்பர் 1 ஆகிய இரு நாட்கள் சென்னை அரசு இசைக் கல்லூரி வளாகத்திலுள்ள தாகூர் கலையரங்கில் நடைபெற உள்ளது. அக்டோபர் 31 அன்று காலை 9.30 மணி முதல் நடனப் போட்டியும், நவம்பர் 1 அன்று காலை குரலிசை, ஓவியம் போட்டிகள் நடைபெற உள்ளன.**

## <u>விதிகள்</u>

**1. குரலிசை**

கர்நாடக இசை, தேசியப் பாடல்கள், சமூக விழிப்புணர்ச்சி பாடல்கள், நாட்டுப்புறப் பாடல்கள் ஆகியவற்றில் தமிழ் பாடல்கள் மட்டுமே பாட வேண்டும். பக்கவாத்தியக் கருவிகளை பாடுபவர்கள் மட்டுமே பயன்படுத்திக் கொள்ளலாம். மேற்கத்திய இசை, திரைப்பட பாடல்கள், குழுப்பாடல்கள் அனுமதியில்லை. குறைந்த பட்சம் 3 நிமிடங்கள் பாடலாம். ஒலி பெருக்கியை பயன்படுத்தக் கூடாது.

**2. நடனம்**

பரதநாட்டியம், தமிழக நாட்டுப்புற நடனங்கள், குச்சிப்புடி, மோகினி ஆட்டம் போன்ற நடனங்களும் ஆடலாம். முழு ஒப்பனை மற்றும் உரிய உடைகளுடன் நடனம் இருத்தல் வேண்டும். திரைப்பட பாடல்களுக்கான நடனங்கள் ( கர்நாடக இசைப் பாடல்களுக்கான திரைப்பட நடனங்கள் தவிர்த்து) மேற்கத்திய நடனங்கள் மற்றும் குழு நடனங்கள் அனுமதியில்லை. பக்கவாத்தியங்களையோ, ஒலி நாடாக்களையோ பயன்படுத்திக் கொள்ளலாம். இவற்றை போட்டியில் பங்கேற்பவர்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். அதிக பட்சம் 5 நிமிடங்கள் வரை நடனமாட அனுமதிக்கப்படும்.

**3. ஓவியம்**

40 X 30 செ.மீ. அளவுள்ள ஓவியத் தாள்களையே பயன்படுத்த வேண்டும். பென்சில், கிரையான், வண்ணங்கள், போஸ்டர் கலர், வாட்டர்கலர் பெயிண்டிங் என எவ்வகையிலும் ஓவியங்கள் அமையலாம். ஓவியத்தாள், வண்ணங்கள் தூரிகைகள் உட்பட தங்களுக்கு தேவையானவற்றை போட்டியாளர்களே கொண்டு வருதல் வேண்டும். குழுவாக ஓவியங்கள் வரைய அனுமதியில்லை. ஒவ்வொரு வயது வகைக்கும் தனித் தனியாக தலைப்புகள் போட்டி தொடங்கும் போது அறிவிக்கப்படும்.

ஒரே குழந்தை மேற்காணும் மூன்று வகைப் போட்டிகளிலும் கலந்து கொள்ளலாம்

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண். **24618162**

************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**